# நடப்பு நிகழ்வுகள்- ஜனவரி 24 - 2017

- தமிழகத்திலேயே முதல்முறையாக ஈரோடு மாவட்டத்தில் அந்தியூரை அடுத்த புதுக்காட்டுபடபுதூர், மஞ்சளாநாயக்கனூரில் ரூ35 லட்சம் மதிப்பில் **நடமாடும் பால் குளிரகம்** , ரூ64 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட **தொகுப்பு பால் குளிர்விப்பு மையங்கள்** ஆகியவற்றை தமிழக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கே.சி.கருப்பணன் தொடங்கி வைத்தார்.
- இந்தியாவிலேயே முதல் முறையாக பொதுமக்களின் உடல் நலம் குறித்த விவரங்களை கம்ப்யூட்டர் மயமாக்கும் **“இ ஹெல்த்”** திட்டம் கேரளாவில் அறிமுகப்படுத்தப்படுகிறது.
- இந்திய கிரிக்கெட் வீரர் **மகேந்திர சிங் தோணி**, ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற பாட்மிட்டன் வீராங்கனை **பி.வி.சிந்து** உள்ளிட்டோருக்கு இந்த ஆண்டிற்கான பத்ம விருதுகள் வழங்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- ராமநாதபுரத்தில் நடைபெற்ற 7 – ஆவது சப் - ஜீனியர் மகளிர் ஹாக்கிப் போட்டியில் **ஜார்கண்ட் அணி சாம்பியன் பட்டம்** வென்றது. 2 – வது இடத்தை ஹரியானாவும் 3 – வது இடத்தை உத்திரபிரதேசமும் பிடித்தது.
- நாட்டின் மிகப் பெரிய போர்க் கப்பலான **‘ஐ.என்.எஸ்’ விக்ரமாதித்யா**வில் முதல் முறையாக செயற்கைகோள் மூலம் இயங்கும் ஏ.டி.எம் மையம் திறக்கப்பட்டுள்ளது. விராட் போர்க்கப்பலில் தொலைபேசி மூலம் இயங்கும் ஏ.டி.எம் மையம் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.
- மத்திய வெளியுறவுத் துறை செயலாளர் **சுப்பிரமணியம் ஜெயசங்கர்** பதவிக்காலம் ஒரு ஆண்டுக்கு நீடிப்பு செய்யப்பட்டுள்ளது.
- 850 மெகாவாட் மின்உற்பத்தி திறன் கொண்ட **உலகின் மிகப்பெரிய சூரிய மின் ஆலை**யை கிங்காய் (Qinghai Province) மாகாணத்தில் சீனா அமைத்துள்ளது. 2013 – ம் ஆண்டு அதை கட்ட ஆரம்பித்தது. 27 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் கட்டப்பட்ட இந்த ஆலைக்கு ஆன மொத்த செலவு 6,000 கோடி ரூபாய் என சீனா தெரிவித்துள்ளது.

- அரசு அலுவலகங்களில் **ஜனவரி – 25** ஆம் தேதி தேசிய **வாக்காளர் தின உறுதிமொழி** எடுத்துக்கொள்ள வேண்டுமென மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.
- தமிழறிஞர் விருது - நெல்லை மனோன்மனியம் சுந்தரனார் பல்கலைக்கழக தமிழ்த்துறை முன்னாள் தலைவர் தொ.பரமசிவன் , சிறந்த படைப்பாளிக்கான விருது - எழுத்தாளர் சிவசங்கரி, வேறுதுறையில் பணியாற்றிக் கொண்டே சுற்றுச்சுழல் பாதுகாப்பு குறித்து தமிழுக்கு பங்களிப்பு செய்துவரும் தியோட்டர் பாஸ்கர் ஆகியோர்க்கு **தமிழ் இலக்கிய விருதுகள்** வழங்கப்பட்டன.
- காவலர்களின் சிறந்த சேவைக்கான **குடியரசுத் தலைவர்** விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் தமிழகத்தில் மதுரை மதுவிலக்கு பிரிவு **ஏ.டி.எஸ்.பி.கார்த்திகேயன் ,** தஞ்சை துணை காவல் ஆய்வாளர் **வீராசாமி** ஆகியோருக்கு வழங்கப்படுகிறது. நற்செயல் விருது தமிழகத்தில் 20 காவலர்களுக்கும் வழங்கப்பட உள்ளது.
- **பசுபிக் வர்த்தக ஒப்பந்தத்தில்** TPP (Trans – pacific partnership) இருந்து அமெரிக்கா விலகிக் கொண்டது. இகற்கான ஆணையில் டொனால்டு டிரம்ப் கையெழுத்திட்டார்.
- இந்திய நாட்டின் சாலைகளில் செல்லும் சுமார் 60% வாகனங்களுக்கு உரிய காப்பீடு இல்லை என பொது காப்பீடு நிறுவன பொதுச் செயலர் சந்திரசேகரன் கூறியுள்ளார்.